# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106
தொலைபேசி எண்: 2363 5010, 2363 5011   நிகரி : 2363 8282, 2363 8283
மின்னஞ்சல் - tnsec.tn@nic.in   இணையதளம் - www.tnsec.tn.nic.in

## செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு : 13 /2020**   **நாள்:** 11.02.2020

சென்னை, தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய கூட்டரங்கில் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் முனைவர் இரா. பழனிசாமி, இ.ஆ.ப., (ஓய்வு) அவர்கள் தலைமையில் 27 மாவட்டத் தேர்தல் அலுவலர்கள் / மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் சென்னை மாவட்ட தேர்தல் அலுவலர்/பெருநகர மாநகராட்சி ஆணையர் ஆகியோருடன் நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் தொடர்பாக காணொலி காட்சி (Video Conferencing) வழியாக கீழ்காணும் பொருள்கள் தொடர்பாக கலந்துரையாடினார்கள்.

- வாக்குச்சாவடிகளை கண்டறிதல்.
- 14.02.2020 அன்று வெளியிடப்படவுள்ள ஒருங்கிணைந்த வாக்காளர் பட்டியலை தொடர்புடைய நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு அளித்தல்.
- உரிய காலத்திற்குள் வரைவு வாக்காளர் பட்டியலை தயாரித்தல் மற்றும் வரைவு வாக்காளர் பட்டியலை வெளியிடுதல்.
- நடைபெற்ற 2019 ஊரக உள்ளாட்சி தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களின் செலவின கணக்குகளை பெற்று சரிபார்த்தல்.
- தேர்தல் தொடர்பான வழக்குகளுக்கு நீதிமன்றத்தில் எதிர்வாதுரை தாக்கல் செய்தல்.
- மாநில தேர்தல் ஆணையத்தின் வலைதளத்தில் தேர்தல் தொடர்பான புள்ளி விவரங்களை பதிவேற்றம் செய்தல் குறித்த அறிவுரைகள்.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய செயலாளர் முனைவர் இல.சுப்பிரமணியன், இ.ஆ.ப., மற்றும் ஆணையத்தின் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி)**

11/2/2020

மக்கள் தொடர்பு அலுவலர்